தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் பவானி சாகர் தொகுதியில் வறட்சியான புஞ்சைப்புளியம்பட்டியிலே--பெயரே புஞ்சைப்புளியம்பட்டி, அங்கேதான் துவங்க வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தியூருக்கே அமைச்சர் இல்லை என்கிறார், நீங்கள் புஞ்சைப்புளியம்பட்டிக்குக் கேட்கிறீர்களே.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தாலும், மத்திய அரசின் வாயிலாக ஐ.டி.பி.ஐ. கடன் நமக்குக் கிடைப்பது இல்லை என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். அன்னை சத்யா பெயரில் கூட்டுறவு நூற்பாலையைத் துவக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் எத்தனையோ முயற்சிகள் செய்து மத்திய அமைச்சர்களைச் சந்தித்து, பல முறை அவர்களிடம் மனுக்களைத் தந்து நேரடியாகச் சந்தித்துக் கூறிய பிறகும், கடன் உதவி கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நிதி நிலைக்கு ஏற்ப செய்ய இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *168*, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

168--

பொன்னேரி தொகுதியில் பழவேற்காட்டிற்கும் லைட் அவுஸ் பகுதிக்கும் இடையில் தரைமட்டப் பாலம் கட்டுதல்.

***16567-திரு. ஏ. ரவிக்குமார்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காட்டிற்கும் லைட் அவுஸ் பகுதிக்கும் இடையே சுமார் 3/4 கி.மீ. நீளத்திற்கு தரைமட்டப் பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழவேற்காட்டிற்கும் லைட் அவுஸ் பகுதிக்கும் இடையே சுமார் 3/4 கி.மீ. நீளத்திற்கு தரைமட்டப்பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பழவேற்காடு பகுதிக்கும், லைட் ஹவுஸ் பகுதிக்கும் இடையே சுமார் 3/4 கிலோ மீட்டர் நீளத்திற்கு பெரிய கால்வாய் இருக்கிறது. இந்தப் பகுதியில் லைட் ஹவுஸ் குப்பம், திருமலைநகர், வைரவன் குப்பம், கோனான் குப்பம் என்று சுமார் 13 குப்பங்கள் இருக்கின்றன. சுமார் 15 ஆயிரம் பேர் அங்கே வசிக்கிறார்கள். தீவு போன்ற அந்த இடங்களில் பெரும்பாலோனோர் மீனவர்கள் மற்றும் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் அனைவரும் மீன்பிடி தொழில் செய்பவர்கள். அவர்கள் மேல் படிப்பு மற்றும் மார்க்கெட்--இவைகளுக்காக நிலப் பகுதிக்கு வர வேண்டும் என்றால், இந்தக் கால்வாயை படகு மூலமாகக் கடந்துதான் வரவேண்டும். இதனால் அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. குறிப்பாக பெண்கள், பள்ளிச் சிறார்கள் போன்றவர்கள் சிறிது தூரம் நீரில் நடந்து வந்து, அதன் பின்னர் படகில் ஏறி, மீண்டும் நீரில் இறங்கி கரையைக் கடக்கின்ற ஒரு வருந்தத்தக்க சூழ்நிலையில் அவர்கள் வாழ்கிறார்கள். இந்தப் பகுதிக்கு நம்முடைய தாயுள்ளம் மிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுமார் 35 இலட்சம் ரூபாயில் இன்றையதினம் குடிநீர்த் திட்டத்தைத் தந்து இருக்கின்றார்கள். இராமனுடைய கால்பட்டு அகலிகை விமோசனம் அடைந்ததாக நாம் படித்து இருக்கிறோம்-ஆனால், பார்த்தது இல்லை; அதுபோல் இன்றைக்கு நம்முடைய உலகம் போற்றும் ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் அவர்கள் பார்வை பெற்ற இடங்களெல்லாம், கால் பட்ட இடங்கள் எல்லாம், கை பட்ட இடங்கள் எல்லாம் விமோசனம் அடைகின்ற தன்மையை நாம் காண்கின்றோம். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் என்னுடைய தொகுதியில்....

முற்பகல் 10.35.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் என்னுடைய தொகுதியில் நாப்பாளையம் என்ற கிராமத்தில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட மேம்பாலம் சுமார் 24 ஆண்டு காலமாக இருந்து வருகிறது. இந்த மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் நான்கு சட்டமன்ற

உறுப்பினர்களையும், ஒரு அமைச்சரையும் பார்த்தது. ஆனால் கால் நூற்றாண்டுகளாக பாதியில் நின்ற அந்தப் பணியானது இன்றையதினம் தங்கத்தலைவி அவர்களின் ஆட்சியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தங்கத்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து, அந்தப் பகுதியில் மேம்பாலம் கட்டித்தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நீண்ட நேரம் கேள்வியைக் கேட்டால் மட்டும் பாலம் வந்து விடாது: (சிரிப்பு) குறிப்பாகக் கேட்டாலே போதுமானது என்று நான் நினைக்கிறேன். இந்தப் பாலம் கட்டுவதற்கு மதிப்பீடு 4 கோடி ரூபாய். குறைந்த நிதியை வைத்துக்கொண்டு ஏதாவது செய்ய வேண்டுமென்றால் உடனடியாக அரசின் தரப்பில் அறிவித்து விடலாம். 4 கோடி ரூபாய் அளவில்தான் இந்தப் பாலம் கட்ட முடியும். வேறு எந்தத் திட்ட மதிப்பீட்டிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே தற்போது இதற்கு சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரவிக்குமார், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்கு ஒரு மேம்பாலம் என்று இன்றையதினம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இந்தத் திட்டத்தை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல அந்தப் பகுதியில் இருக்கிற மீனவக் குடும்பங்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இந்தப் பாலத்தால் பயன் அடைவார்கள் என்பது இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். இருக்கிற பிரச்சினையே நிதியாதாரங்கள்தான். அதுவும் 4 கோடி ரூபாய் என்கிறபோது அதை ஒதுக்க இந்த நேரத்தில் நிதியாதாரம் இல்லாத

காரணத்தால் தான் இப்படிப்பட்ட பிரச்சினையே ஏற்படுகிறது. ஆகவே, எதிர்காலத்தில் இதைப்பற்றி நிதிநிலையைப் பொறுத்து அரசு ஆராயும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 169, திரு ஏ.தா. பொன்னுவேலு, இருக்கையில் இல்லை.*

வினா எண் 170, திரு. ஆர். பி. பரமசிவம் ; மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

170--

அரசு குடியிருப்புகளில் குடியிருக்கும் அரசு ஊழியர்களுக்கு அக்குடியிருப்புகளைச் சொந்தமாக்குதல்

21743- திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரசு குடியிருப்புகளில் குடியிருந்துவரும் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதிக் கடன் வழங்கி அவர்களுக்கு அவ்வீடுகளைச் சொந்தமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு என்ற இந்த மூன்று அடிப்படை வசதிகள் இந்த பூபாகத்தில் அவதரித்த அனைவருக்கும் தேவை என்ற உணர்வில் நமது இதய தெய்வம் அவர்கள், இந்த மூன்று அடிப்படை வசதிகள் அனைவருக்கும் கிடைக்க முழு கவனம் செலுத்தி வருவதை நாம் அறிவோம். எனவே, அரசின் நிதிநிலை காரணமாக இந்த அரசு குடியிருப்புகள் சரிவர பராமரிக்க முடியாமல் இருப்பதை நாம் அறிய முடிகிறது. ஆகவே, மறு பரிசீலனை செய்து இந்த வீடுகளை, குடியிருக்கும் அரசு ஊழியர்களுக்குச் சொந்தமாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.